செய்தி வெளியீடு எண் : 1126 நாள் : 02.08.2024

# செய்தி வெளியீடு

பழங்குடியினர் நலத்துறையில் 212 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட ஆரம்பப்பள்ளிகள்,49 நடுநிலைப்பள்ளிகள், 31 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 28 மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் 320 பள்ளிகளில் 24689 மாணவ/மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர்.

இப்பள்ளிகளின் மாணாக்கர்களின் கல்வித் தரத்தினை உயர்த்திட சிறப்பு ஆசிரியர்கள் மூலம் மாலை நேர வகுப்புகள், உயர்நுட்ப ஆய்வகங்கள், இணையதள வழியில் கல்வி பயிற்றுவித்தல், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு முன்னெடுப்புகளை அரசு செயல்படுத்தி வருகிறது.

இதன் விளைவாக 2023–2024 ஆம் கல்வியாண்டில் 10 மற்றும் 12 வகுப்பு பொது தேர்வில் முறையே 92.45% மற்றும் 95.15 % தேர்ச்சி பெற்று பழங்குடியினர் நலப்பள்ளிகள் சாதனை படைத்துள்ளன.

2023–2024 ஆம் ஆண்டில் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களில் 99% மாணாக்கர் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர். JEE, CLAT, CUET மற்றும் NIFT தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சிகள் மூலம் 2023–2024 ஆம் ஆண்டு 9 பழங்குடியின மாணாக்கர்களும் 2024–2025 ஆம் ஆண்டு 7 பழங்குடியின மாணாக்கர்களும்தேசிய அளவிலான உயர்கல்வி நிறுவனங்களான திருச்சி தேசிய தொழில்நுட்ப நிறுவனம் (NIT), திருச்சி தேசிய சட்டப்பல்கலைக்கழகம், சென்னை, தரமணி மற்றும் பெங்களூரு தேசிய உடையலங்கார தொழில்நுட்பக் கல்லூரி (NIFT)ஆகியவற்றில் சேர்ந்துள்ளனர்.

2024–2025 கல்வியாண்டில் மேற்கண்ட நிறுவனங்களில் மாணாக்கர் சேர்க்கை உறுதி செய்ய JEE, CLAT, CUET மற்றும் NIFT தேர்வுகளுக்கான சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட வளர்ச்சியினை தொடர்ந்து உறுதி செய்ய பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளுக்காக ஒப்பளிக்கப்பட்டுள்ளமுதுநிலை பட்டதாரி ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர்மற்றும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் அனைத்திலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில்(TET) வெற்றிபெற தகுதியுள்ள பழங்குடியினர் இளைஞர்களுக்கு 10ஆம் தேதி முதல் சேலம், கள்ளக்குறிச்சி, தருமபுரி, நாமக்கல், திருவண்ணாமலை, திருச்சி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் இணைய வழி சிறப்புப் பயிற்சி துவங்கப்பட உள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**


அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu